13.07.2026.

O.S.No. 33/2024

PW1– மாரியப்பன் – த/பெ. இசக்கி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.07.2026.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சொந்தமாக வாடகை லோடு ஆட்டோ வைத்து தொழில் செய்துவருகிறேன் என்றால் சரிதான்.,அதுதான் என்னுடைய பிரதான தொழில் என்றால் சரிதான். எனக்கு விவசாயம் எதுவும் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மூலம் 3 ½ செண்ட் வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 3 ½ செண்டின் ஒருபகுதியை 1ம்பிரதிவாதியிடம் இருந்து நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தான் வா.சா.ஆ.2 என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்த பத்திரஎழுத்தருக்கு விவரம் சொன்னது யார் என்றால் நானும், 1ம் பிரதிவாதியும் சொன்னோம். அதைபடித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தோம்.அதிலுள்ள சங்கதிகள் எல்லாம் உண்மை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணததில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில்தான் நான் அனுபவம் செய்துவருகிறேன் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு பிறகு மீதமுள்ள சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல, கோவிலுக்கு கொடுத்துவிட்டார். எனது பிராதிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ கோவிலுக்கு கொடுத்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எப்போது சுற்றுச்சுவர் கட்டினார் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். கோவிலானது வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு தெற்குபக்கம் உள்ளதுஎன்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு கோவிலுக்கு சொத்து கொடுக்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. என்னிடம் கிரையம்பேசும்போது எனக்கு கொடுத்த 3 செண்ட் போக மீதமுள்ள இடத்தில் கோவிலுக்கு கொடுப்பதாக கூறினார். எனக்கு கிரையம் கொடுத்த காலத்தில் 1ம் பிரதிவாதி 3 செண்ட் நிலத்தையும் அவர்தான் அனுபவம் செய்துவந்தார் என்றால் சரிதான். கோவில் எங்கள் சமுதாய கோவில் என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதியும் ஒரே சமுதாயம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வேறு சமுதாயத்தை சார்ந்தவர்.

5. மேற்படி கோவிலுக்கு நான் வரிதாரர் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும்போது கோவில் நிர்வாகி செண்டு நம்பியார் மற்றும் சுப்பிரமணி நம்பியார். தற்போது வரை அவர்கள்தான் நிர்வாகத்தில் உள்ளார்கள். அவர்களை தவிர பரமசிவம், வெங்கடேசன் நிர்வாகியாக உள்ளார்கள். எனக்கும்,அவர்களுக்கும் எந்த பகையும்இல்லைஎன்றால் சரிதான்.அவர்களை எங்கள் தரப்பில் விசாரிக்கலாம் என்றால் சரிதான்.

6. 1ம் பிரதிவாதி கோவிலுக்கு எந்த இடத்தையும் கொடுக்கவில்லை, எனக்கு கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள ½ செண்ட் இடத்தை அவர்தான் அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. கோவில் காம்பவுண்ட் சுவர் 50 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளது என்றால் வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தும்போது தான் ஏற்படுத்தப்பட்டது. வழக்கு சொத்தும் கோவிலும் வெவ்வேறு சர்வே எண்ணில் உள்ளது என்றால் சரிதான். சர்வேயர் மூலம் அளந்தால் சுற்றுச்சுவர் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு அளந்தால் அது எனக்கு விரோதமாக இருக்கும் என்பதால் ஆணையரை நியமிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள சொத்துதான் வழக்குச்சொத்து என்றால் சரிதான். **மேற்படி புகைப்படங்கள்(எண்ணம்–6) பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள புகைப்படங்களில் வழக்கு சொத்தில் தகர சீட்டால் அமைக்கப்பட்ட செட் உள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள வைக்கோல், மிஷினால் கட்டப்பட்டது என்றால் சரிதான். நான் எதிருரையை படித்துப்பார்த்தேன். பிரதிவாதி தான் தகர சீட் அமைத்து, மிஷினால் கட்டப்பட்ட வைக்கோல் கட்டியதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல, அது என்னால் அமைக்கப்பட்ட தகர செட்டில் மிஷினால் கட்டப்பட்ட வைக்கோல் கட்டுகளை வைத்துள்ளேன்.

7. பிராது, முதல்விசாரணை வாக்குமூலத்திற்கு நான் தான் தகவல் சொன்னேன். அதை படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்துள்ளேன். எனது பிராதிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் ஆஸ்பெஸ்டாஸ்

சீட்டால் அமைக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆஸ்பெஸ்டாஸ் சீட் என்பது சிமெண்டால் அமைக்கப்பட்ட கூரை என்றால் சரிதான். வழக்குசொத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டால் அமைக்கப்பட்ட கூரை இல்லை என்றால் சரிதான். நான் தவறாக சொல்லிவிட்டேன். வழக்குசொத்தில் உள்ள தகர சீட் 1ம் பிரதிவாதியால் அமைக்கப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதியிடம் இருந்து, 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய காலத்தில் இருந்து வழக்கு 4ம் தபசில் சொத்தை அனுபவித்துவருகிறார் என்றால் சரியல்ல. 4ம் தபசில் சொத்து கோவிலால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை நிரூபிக்க ஆணையர் நியமனம் செய்தால் துலங்கும் என்றால் சரிதான். கோவிலை கட்சி சேர்க்காமல் 2ம் பிரதிவாதியிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வம்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**